மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சேலத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நூற்பாலை 1,45,64,000 ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே புதிய கூட்டுறவு நூற்பாலை எடப்பாடியிலே மட்டுமல்ல; தமிழகத்திலே எங்கேயும் நிறுவுவதற்கான அரசின் பரிசீலனை இல்லை.

திரு.க. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொங்கணாபுரம் பகுதி ஏழை மக்கள் நிறைந்த பகுதி. அது வறட்சியான பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் வேறு இடத்திற்குச் சென்றுதான் கூலிவேலை செய்து ஜீவனம் செய்து வருகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியிலே நூற்பாலை அமைக்காவிட்டால் கூட ஜின்னிங் ஃபேக்டரியாவது அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் அரசின் சார்பாக இருக்கின்றன. அவை அனைத்தும் நஷ்டத்தில்தான் இயங்குகின்றன. அவற்றை இலாபத்தில் கொண்டுவருகிற முயற்சிகளுக்குரிய திட்டங்களை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட புதிய ஃபேக்டரி அமைப்பதற்கும், நூற்பாலைகள் அமைப்பதற்கும் இப்போது அரசின் பரிசீலனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 435, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 436, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

436—

திருவட்டார் தொகுதியில் கலைக் கல்லூரி தொடங்குதல்

***44842—**திரு. இரா. அப்பு நடேசன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 25]

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதியில் தனியார் கலைக் கல்லூரி தொடங்க அரசு முன்னுரிமை அளித்து அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டிலேயே அனுமதி வழங்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு கல்வி முகமைகளிடமிருந்து உரிய காலத்தில் விண்ணப்பம் பெறப்பட்டால் அரசாணை எண் 858, நாள் 15-7-1989-ன்படி பரிசீலித்து அரசு முடிவெடுக்கிறது. முன்னுரிமை அடிப்படை இதில் இல்லை. தகுதி அடிப்படையில்தான் பரிசீலனை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) அடுத்த வினாவுக்கு இடமில்லை.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த வினாவுக்கு இடமில்லை என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் ராமகிருஷ்ண வித்யாலயா எஜுகேஷன் சொசைட்டி இருக்கிறது. அவர்கள் ஒரு சுயநிதிக் கல்லூரிக்கான அப்ளிக்கேஷன் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான விதிகள் என்னென்ன, எவ்வளவு ரூபாய் அரசுக்குச் செலுத்த வேண்டும், எவ்வளவு நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்ற அந்த விதிமுறைகளைக் கூறுவார்களா அமைச்சர் அவர்கள் என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க வேண்டுமென்றால், ஒவ்வொரு ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் விண்ணப்பத்தை கல்லூரிக் கல்வி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். அந்தக் கல்வி முகமையின் அறக்கட்டளையின் நகல் ஒன்றும் அதற்கு கட்டணமாக ரூ.500-ம் செலுத்த வேண்டும். 10 லட்சம் ரூபாய்க்கு ஒரு அறக்கட்டளை, கல்வி முகமையின் பெயரிலும், கல்லூரிக் கல்வி ஆணையரின் பெயரிலும் இருக்க வேண்டும். கிராமப்புறப் பகுதியாக இருந்தால் 10 ஏக்கர் நிலமும் நகர்ப்புறப் பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலமும் அந்த முகமையின் பெயரிலேயே இருக்க வேண்டும். கல்லூரியைத் தொடங்குவதற்குத் தேவையான தற்காலிக கட்டிட வசதியும், அதிலே

வகுப்பறை வசதி, விடுதி வசதி, விளையாட்டிட வசதி, நூலகம், ஆய்வகம் போன்ற அனைத்து வசதிகளும் பல்கலைக்கழக விதிகளின்படி இருந்தாகவேண்டும். தேவையான, தகுதிபெற்ற ஆசிரியர்கள் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், அதை கல்லூரிக் கல்வி ஆணையம் ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் அனுமதி தருகிறது. அதற்குப் பின்னால் பல்கலைக்கழகத்திலே அபிலியேஷன் (இணைவு) பெற்று அந்தக் கல்லூரி தொடங்கப்படுகிறது. திருவட்டார் தொகுதியில், குலசேகரம் பகுதியில், அருவிக்கரையில் கல்லூரி தொடங்க அனுமதி கேட்டு ஸ்ரீஇராமகிருஷ்ணா எஜுகேஷன் சொசைட்டி என்ற கல்வி முகமையிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கல்வி முகமை அரசாணை எண் 858-ல் கண்டுள்ள நிபந்தனைகளை முழுமையாக நிறைவு செய்யவில்லை. 10-11-1994-ல் இதுகுறித்து இராமகிருஷ்ணா கல்வி முகமைக்கு கல்லூரிக் கல்வி ஆணையர் கடிதம் அனுப்பியிருக்கிறார். கல்வி முகமையிடமிருந்து கிடைக்கப்பெறும் விவரங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரம் சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் 10 லட்ச ரூபாய் அடைப்பதைத் தவிர மற்ற எல்லா வசதிகளையும் செய்திருப்பதாகக் கூறினார்கள். 10 ஏக்கர் பூமி இருப்பதாக சொன்னார்கள். அதுபோக, தற்காலிகக் கட்டிட வசதியும், விளையாட்டு மைதான வசதி போன்றவை எல்லாம் இருப்பதாகக் கூறினார்கள். 10 லட்ச ரூபாய்க்கு பதிலாக 30 லட்ச ரூபாய்க்கு சால்வன்சி சர்டிபிகேட் கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தற்காலிகமாக அந்த சால்வன்சியை, 10 லட்ச ரூபாய்க்காக வைத்துக் கொண்டு, அவர்களுக்கு 2,3 மாத காலம் அவகாசம் கொடுத்து அந்த கல்லூரிக்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளின்படி இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். மோசஸ்.

டாக்டர் எம். மோசஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரிகள் ஒன்றுகூட இல்லை. எல்லாம் தனியார் கல்லூரிகளாகவே இருக்கின்றன. ஆகவே அரசு கலைக் கல்லூரியை தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநெருக்கடி காரணமாக புதிய அரசு கலைக் கல்லூரிகளை தொடங்கும் வாய்ப்பு தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 437, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

437—

அந்தியூர் ஒன்றியத்தில் கிராம அங்காடி அமைத்தல்

***24472—**திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், குப்பாண்டம்பாளையம் ஊராட்சி, காட்டூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் உள்ள கிராம அங்காடியின் உணவுப் பொருள்களை அப்பகுதி மக்கள் நீண்ட தூரம் வந்து வாங்க சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கருவல்வாடிப்புதூரில் ஒரு கிளை கிராம அங்காடி திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் ஒன்றியத்தில் உள்ள குப்பாண்டம் பாளைம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி காட்டூர் என்னும் இடத்தில் நியாய விலைக் கடை ஒன்றினை நடத்தி வருகிறது. காட்டூர் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள கிராமங்கள் நியாயவிலைக் கடை இயங்கும் இடத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அடங்கியிருக்கின்றன.

(ஆ) கருவல்வாடிப்புதூர் கிராமம் காட்டூர் நியாயவிலைக் கடையிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால் புதிய கடை ஒன்றை அங்கே திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம் குப்பாண்டம்பாளையம் ஊராட்சியில் காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இணைந்தாற்போன்று கிராம கூட்டுறவு அங்காடி இருக்கிறது. அந்த